# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு எண்: 207/மா/2017**
**ஆணை நாள்: 20–12–2018**

திரு. C. ஆறுமுகம்,
கழிஞ்சூர், காந்திநகர்,
வேலூர் - 632 006.

--- மனுதாரர்

ஆணையர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர்.

--- எதிர்மனுதாரர்

வேலூர் மாநகராட்சி, எண்.14, பஜனைக் கோவில் தெரு, கழிஞ்சூர், காந்தி நகர் அஞ்சல், வேலூர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. C. ஆறுமுகம் என்பவரது 21.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு 24.10.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.207/2017 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. இம்முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை:**

திரு. C. ஆறுமுகம், வேலூர் என்பவர் 21.10.2017 தேதியிட்ட தனது முறையீட்டு மனுவில் குடியாத்தம் நகராட்சியில் துப்புரவு அலுவலராக பணிபுரிந்து 30.11.2011ல் பணி ஓய்வு பெற்றதாகவும் தனது பணிக்காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேம நல நிதி சந்தா தொகைக்கான (Provident Fund) வட்டித் தொகை வழங்கப்படாமல் உள்ளது எனவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

திரு. C. ஆறுமுகம், என்பவரது முறையீட்டு மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு 15 தினங்களுக்குள் சமர்ப்பிக்க 31.10.2017 தேதியிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. ஆனால் ஒரு ஆண்டு காலம் கடந்துவிட்ட நிலையிலும் மனுதாரருக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை வழங்கப்பட்ட விபரம் அறிக்கையாக சமர்ப்பிக்கப்படவில்லை.

இவ்வாறான செயல் தனக்குறிய பணியின் பேரில் அக்கறையும், பொறுப்புமில்லை என்பதையே காட்டுகிறது என்பதை இம்முறைமன்ற நடுவம் பதிவு செய்கிறது.

வேலூர் மாநகராட்சி ஆணையர், மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையினை வழங்கி அதன் விபரத்தினை அறிக்கையாக இம்முறைமன்ற நடுவத்தில் 15 நாட்களுக்குள் சமர்ப்பிக்க அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடுகிறது.

2018-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

1. திரு. C. ஆறுமுகம்,
   எண்.14, பஜனைக் கோவில் தெரு,
   கழிஞ்சூர், காந்திநகர் (அஞ்சல்),
   வேலூர் - 632 006.

2. ஆணையர்,
   வேலூர் மாநகராட்சி,
   வேலூர்.